# திருகுர்ஆனைப் பற்றி விஞ்ஞானிகள்!

பொன். மைதீன்பிச்சை, **பி.எ.டி.,**

அல்லாஹ்(சுபு)வினால் மனித குலத்துக்கு அருளாக வழங்கப்பட்ட அல்குர்ஆனில் அறிவியல் குறித்துப் பேசும் ஏராளமான வசனங்கள் உள்ளன.

அந்த வசனங்களெல்லாம் பல அறிவியலாளர் களின் இதயத்தைக் குடைந்த சம்பவங்களும் ஏராளம் உள்ளன. அப்படிப்பட்ட சம்பவங்களில் சிலவற்றை இங்கே தருகிறோம்!

**டாக்டர் TVN பெர்சௌத் (Persavd)**

இவர் கனடாவின் வின்னிபெக் நகரில் உள்ள மனிடோபா மருத்துவப் பல்கலைக் கழகத்தில் உடலியல், குழந்தை மற்றும் குழந்தை நலம், மகப்பேறு மற்றும் மகப்பேறு மருத்துவம், இன விருத்தி அறிவியல் ஆகிய துறைகளில் பேராசிரி யராகப் பணி புரிகின்றார். இந்தப் பல்கலைக் கழகத்தில் 16 ஆண்டுகள் உடலியல் துறைச் சேர்மனாகப் பணியாற்றியுள்ளார். இங்குள்ள மருத்துவத் துறையில் மிகவும் பிரபலமானவராகவும் இருக்கின்றார். மேலும் மருத்துவத் துறை சம்பந்தமாக 22 நூல்களும் 181 ஆய்வுக் கட்டுரைகளையும் எழுதி உள்ளார். 1991ல் கனடாவின் உடலியல் மருத்துவக் கழகத்தின் மதிப்புமிக்க விருதான J.C.B.விருதை, இவரது உடலியல் துறை ஆய்வுக்காகப் பெற்றார்.

அவரிடம் அல்குர்ஆனில் கூறப்பட்டிருக்கும் அறிவியல் அற்புதங்கள் பற்றிக் கேட்டபோது நீண்ட ஆராய்ச்சிக்குப் பின் கீழ்கண்ட கருத்தை வெளியிட்டார்.

முஹம்மது அவர்கள் படிக்கத் தெரியாத, எப்படி எழுதுவது என்று கூட அறியாத சாதாரண மனிதராகத் தான் எனக்குத் தோன்றுகிறது. சுருங்கச் சொல்லப் போனால் அவர் ஒரு படிப்பறிவில்லாதவர். மேலும் நாம் இங்கே பேசிக் கொண்டிருப்பது 14 நூற்றாண்டுகளுக்கு முன் நடந்த சம்பவங்களைப் பற்றியுமாகும். எழுத்தறிவு, படிப்பறிவே இல்லாத ஒருவர் இன்றைய அறிவியல் உண்மைகளுக்கு மாற்றமில்லாத வகையில் இவ்வளவு ஆழமான அறிவியல் கருத்துக்களை எவ்வாறு கூற முடிந்தது என்பது மிகவும் ஆச்சரியமான ஒன்றே. சந்தர்ப்பவசமாக நிகழ்ந்தது என்று கூட என்னால் கூற இயலவில்லை. ஏனெனில் ஒன்றல்ல இரண்டல்ல அதிகமான அளவில், மிகச் சரியான அளவில் அல்லவா அதன் அறிவியல் உண்மைகள் அமைந்துள்ளன. டாக்டர் மூர் அவர்களைப் போல எனக்கும் இது இறைவனால் (முஹம்மது(ஸல்) அவர்களுக்கு) அருளப்பட்டது அல்லது வழங்கப்பட்ட (நெறிநூல்) என்பதை ஏற்றுக்கொள்ள எந்த சிரமமும் தோன்றவில்லை என்ற அறிக்கையை தனது ஆய்வுகளுக்குப் பின் அவர் வெளியிட்டுள்ளார்.

மேலும் அவர் ஆய்வு செய்த குர்ஆனிய வசனங்களையும் மற்றும் முஹம்மது(ஸல்) அவர்களின் பொன்மொழிகளையும் தனது ஆய்வு நூற்களில் மேற்கோடிட்டுக் காட்டியுள்ளார். அதுமட்டுமல்லாமல் தான் கலந்து கொண்ட, கலந்து கொள்கிற பல்வேறு ஆய்வரங்கங்கள் மற்றும் கூட்டங்களில் இது பற்றிப் பேசியும் வருகிறார்.

**டாக்டர். ஜோ லேக் சிம்ஸன் (Dr.Joeleigh Simpson)**

இவர் அமெரிக்காவில் உள்ள டெக்ஸாஸ் மாநிலத்திலுள்ள பேய்லர் மருத்துவக் கல்லூரியில் மகப்பேறு மற்றும் மகப்பேறு மருத்துவத் துறைச் சேர்மனாகவும், இதே துறைகளில் பேராசிரியராகவும் மற்றும் மனித பரம்பரையியல் மற்றும் மூலக்கூறுகள் Prof. Molecular and Human Gentics துறைப் பேராசிரியராகவும் பணியாற்றி வருகின்றார்.

மேலும், அமெரிக்காவில் உள்ள மெம்பிஸ் நகரின் டென்னஸி பல்கலைக் கழகத்தில் மகப்பேறு மற்றும் மகப்பேறு மருத்துவத்துறைச் சேர்மனாகவும் பணியாற்றி உள்ளார். இவர் அமெரிக்க மனித வளச் சங்கத்தின் (President of the American Fertling Society) தலைவராகவும் இருக்கின்றார். இவர் பல்வேறு பரிசுப் பதக்கங்களைத் தன்னுடைய ஆய்வுக்காகவும் சிறந்த மருத்துவ சேவைக்காகவும் பெற்றுள்ளார்.

இதில் மகப்பேறு மற்றும் மகப்பேறு மருத்துவ பேராசிரியர்கள் சங்கத்தின் பேராசிரியர்கள் சங்கத்தின் பெருமைமிகு விருந்தான Public Recognition Award விருதை 1992ல் பெற்றார். உங்கள் ஒவ்வொருவரின் படைப்புக்கான மூலப் பொருட்கள் யாவும் ஒன்று திரட்டப்பட்டு உங்கள் தாயின் கரு வறையில் நாற்பது நாட்கள் வைக்கப்படுகின்றீர்கள்.

(முஸ்லிம் 2643, புகாரி, 3208)

உங்கள் தாயின் கருவறையில் நாற்பத்தி இரண்டு நாட்கள் கடந்த பின், இறைவன் ஒரு வானவரை அனுப்பி வைத்து அவர் (அக் கருவின்) செவி மற்றும் பார்வைப் புலன்களையும், தோல், சதை மற்றும் எலும்புகளையும் ஒருங்கமைக்கின்றார்.

பின்பு இறைவனிடம் அவர் இது ஆணா அல்லது பெண்ணா? என வினவ, இறைவன் தான் விரும்பியதைப் படைக்கின்றான். (முஸ்லிம், 2645)

மேற்கண்ட இரண்டு நபி(ஸல்) அவர்களின் பொன்மொழிகளையும் இவர் ஆய்வு செய்த பின் கீழ்க்கண்ட கருத்தை வெளியிட்டார். மேற்கண்ட இரண்டு பொன்மொழிகளும் மனிதனின் கருவளர் நிலைகளின் முக்கிய நிலையான நாற்பது நாட்களுக்கு முந்தைய நிலையைக் குறிப்பான முறையில் பட்டியலிடு நமக்கு வழியமைத்துக் கொடுத்திருக்கின்றது என்று அவர் குறிப்பிட்டார். மேலும் இந்த இரண்டு பொன் மொழிகளும் வெளியிடப்பட்ட கால அளவை எடுத்துக் கொண்டால், இவை அறிவியலை அடிப்படையாகக் கொண்டு தொகுத்திருக்க முடியாது.

மவ்லவிகளை நம்பி அவர்கள் பின்னால் செல்பவர்கள் குர்ஆன், ஹதீஸை பின்பற்றுகிறோம் என்பதில் பொய்யர்களே!

பாரம்பரியவியலுக்கும் மதத்திற்கும் முரண்பாடுகள் இல்லாமல் இருந்ததில்லை என்றே நினைக்கின்றேன்.

ஆனால், திட்டமாக அல்குர்ஆன் அருளப்பட்டு இவ்வளவு நூற்றாண்டு கால இடைவெளிக்குப் பின்னாலும், வழிவழியாகத் தொடர்ந்து கொண்டிருக்கும் அறிவியல் அணுகு முறைகளைத் திருகுர்ஆன் வழி நடத்துகிறது.

அல்குர்ஆனில் இருக்கின்ற இறை வசனங்கள் அந்த அற்புதத்தை நிகழ்த்திக்கொண்டு இருக்கின்றன. ஏனெனில் குர்ஆனில் அருளப்பட்டுள்ள வசனங்கள் யாவும் அந்த இறைவனிடம் இருந்து பெறப்பட்ட ஞானம் தான் என்ற உண்மைக்கு சான்றுரைப்பவையாக அதன் வசனங்கள் அமைந்துள்ளன என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

**டாக்டர். மார்ஷல் ஜான்ஸன் (Dr.E.Marshall Johnson)**

இவர் அமெரிக்காவில் உள்ள பென்சில் வேனியா மாநிலத்தின் பிளடெல்பியா நகரின் தாமஸ் ஜெஃப்ஃபர்ஸன் பல்கலைக் கழகத்தில் உடற்கூறு இயல் மற்றும் உயிரியல் வளர்ச்சி இயல் (Anatomy and Developmentel Biology) துறைப் பேராசிரியராகவும் இருக்கின்றார். டேனியல் பாக் கல்வி (Daniel Baugh Institute) நிறுவனத்தின் டைரக்டராகவும், அதிலேயே 22 ஆண்டுகள் பேராசிரியராகவும் உடலியல் துறைச் சேர்மனாகவும் பணியாற்றி உள்ளார். 200க்கும் மேற்பட்ட பத்திரிக்கை வெளியீடுகளைச் செய்துள்ளார்.

1981ல் சவூதி அரேபியாவின் தம்மாம் நகரில் நடைபெற்ற 7வது மருத்துவக் கருத்தரங்கில் கலந்து கொண்டு கீழ்க்கண்ட தமது ஆய்வறிக்கையை வாசித்தளித்தார்.

அதன் சுருக்கமாவது: அல்குர்ஆன் கருவின் வளர்நிலைகளின் வெளிஅமைப்பை மட்டும் விவரிக்கவில்லை.

கருவின் உள்வளர்நிலைகளின், அவற்றின் படைப்பு மற்றும் வளர்ச்சி ஆகியவற்றை இன்றைய அறிவியலினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட மாபெரும் நிகழ்வுகளில் இருந்து பிறழாது தனது கருத்துக்களை தெளிவாகவே விவரித்துள்ளது.

நான் ஒரு விஞ்ஞானி என்ற முறையில், நான் தெளிவான முறையில் அறிந்தவற்றை மட்டுமே என்னால் கையாள இயலும். இதில் கருவியலையும், உயிரியல் வளர்நிலை இயல் (Develope-mental Biology) ஆகிய துறைகளை நான் நன்கு அறிவேன்.

எனக்கு மொழி மாற்றம் செய்து கொடுக்கப்பட்ட குர்ஆனின் வசனங்களையும் என்னால் தெளிவாகவே புரிந்து கொள்ள முடிந்தது.

இந்த குர்ஆனிய வசனங்கள் வெளிப்பட்ட நாளில் இன்று உயிருடன் இருக்கும் என்னை உட்படுத்திப் பார்ப்பேனேயாகில், இன்று என்னால் அறிந்து கொள்ள முடிந்த விசயங்களையும் விவரிக்கப்பட்டுள்ளவைகளையும் குர்ஆனில் அன்று விவரிக்கப்பட்டது போல் என்னால் விவரிக்க இயலாது. முஹம்மது என்ற அந்தத் தனி மனிதர் எங்கோ சென்று இந்தத் தகவல்களைப் பெற்றிருக்க வேண்டும் என்ற கருத்திற்கான எந்த ஆதாரத்தையும் என்னால் காண இயலவில்லை.

ஆகையால், அன்று முஹம்மது ஓதிய இந்த எழுத்துக்களை அவர் பெற்றதில் ஏதோ ஒரு தெய்வீகத் தலையீடு நிகழ்ந்திருக்க வேண்டும் என்று தான் எண்ணத் தோன்றுகின்றது என்று குறிப்பிட்டுப் பேசினார்.

**டாக்டர். வில்லியம் W.ஹேய் (Dr.William W.Hay)**

இவர் உலகறியப்பட்ட கடல் ஆராய்ச்சியாளராவார். இவர் அமெரிக்காவின் கொலராடோ மாநிலத்தில் உள்ள போல்டர் நகரில் இருக்கும் கொலராடோ பல்கலைக் கழகத்தில் புவிஇயல் அறிவியல் துறையில் பேராசிரியராகப் பணியாற்றி உள்ளார்.

இதற்கு முன் அமெரிக்காவின் ஃபுளோரிடா மாநிலத்தின் மியாமி நகரில் உள்ள மியாமி பல்கலைக்கழகத்தின் ரொசெனசியல் கடலாய்வு மற்றும் வளிமண்டல அறிவியல் (Marine and Atmosphere Science) கல்லூரியின் தலைவராகவும் பணியாற்றி உள்ளார்.

தற்போதைய நவீன அறிவியலின் துணை கொண்டு கடலின் தன்மைகள் பற்றி குர்ஆன் குறிப்பிட்டுள்ள அறிவியல் உண்மைகள் பற்றி பேராசிரியர் ஹேய் அவர்களிடம் கலந்துரையாடியபோது, பழங்காலத்தைய நெறி நூலான குர்ஆனில் கூறப்பட்டிருக்கும் தகவல்கள் மிகவும் ஆவலைத் தூண்டக் கூடியனவாக உள்ளன. மேலும் இது எங்கே இருந்து வந்திருக்க வேண்டும் என்பதை என்னால் அறிந்துகொள்ள வழியில்லை, ஆனால் இதில் கூறப்பட்டுள்ளவை மிகவும் ஆர்வமூட்டுபவையாகவும் மேலும் அதில் சொல்லப்பட்டுள்ளவை குறித்து ஆராய்ச்சிக்கு உட்படுத்தி கண்டுபிடிக்க வேண்டியவையாகவும் உள்ளன எனக் கூறினார். மேலும் அவரிடம் குர்ஆனைப் பற்றி கேட்ட பொழுது, இது ஒரு தெய்வீக வெளிப்பாடாகத்தான் இருக்க வேண்டும் எனக் கூறினார்.

**டாக்டர். ஜெரால்ட் C.கோரிங்கர் (Dr.Gerald C.Goeringer)**

இவர் அமெரிக்காவின் வாஷிங்டன் DC மாநிலத்தின் ஜார்ஜ் டவுன் பல்கலைக் கழகத்தில் உள்ள மருத்துவக் கல்லூரியில் செல் உயிரியல் துறையில் கருவியல் பாடத்திட்டப் பேராசிரியராகப் பணியாற்றி வருகின்றார். சவூதி அரேபியாவின் தலைநகர் ரியாத்தில் நடைபெற்ற எட்டாவது சவூதி மருத்துவக் கருத்தரங்கில் கலந்துகொண்டு அவர் பேசும்போது, சில குர்ஆனிய வசனங்கள் மனித கரு வளர்ச்சியின் ஆரம்ப நிலையிலிருந்து, அதாவது ஆணின் விந்தும் பெண்ணின் கருமுட்டையும் சந்தித்து ஒன்று சேர்ந்து கொண்ட நிலையிலிருந்து உறுப்புகளின் வளர்ச்சியினூடாக செல்லும் மனித கரு வளர்ச்சியின் நிலைகளைத் தெளிவாகவே விவரிக்கின்றது.

மேலும் மனித கரு வளர்ச்சியின் நிலைகளைப் பற்றிய அவற்றை வகைப்படுத்துதல், கலைச் சொல்லாக்

மவ்லவி புரோகிதர்கள் பின்னால் செல்பவர்கள் 9:31, 42:21 வசனங்கள் படி இணை வைப்பவர்களே!

கம், பட்டியலிடுதல் போன்ற குறிப்பான தகவல்கள் இது வரை முன்பு எங்கும் இருந்ததில்லை. இன்னும் சொல்லப்போனால், பரம்பரை பரம்பரையாக இலக்கியங்களில் வரக்கூடிய இது போன்ற அறிவியல் தகவல்கள் பல நூற்றாண்டுக் கால ஓட்டத்தில் அவை வழக்கிழந்து போயிருக்க வேண்டும்.

ஆனால் மனித வளர்ச்சியைப் பற்றி குர்ஆன் கூறியிருக்கும் கருத்துக்கள் இன்னும் காலத்தால் அழியாமல் நிலைத்து நிற்கின்றன என்று கூறினார்.

**டாக்டர்.யோஸிஹைட் கோஸை (Dr.Yoshihide Kozai)**

இவர் ஜப்பானின் தேசிய வானவியல் தொலைநோக்கிக் (National Astronomical Observatory)க்கூட ஆய்வகத்தின் தலைவராக பணியாற்றி உள்ளார். மேலும் ஜப்பானின் டோக்கியோ பல்கலைக் கழகத்தில் பேராசிரியராகவும் பணியாற்றி வருகின்றார். இவர் குர்ஆனில் உள்ள பிரபஞ்சத்தைப் பற்றிய வசனங்களைப் பார்வையிட்ட பின், "எங்களைப் போன்ற நவீன வானவியலாளர்கள் இந்த பிரபஞ்சத்தைப் பற்றி வெகு குறைவாகவே அறிந்திருக்கின்றோம். இதில் குர்ஆனில் கூறப்பட்டிருக்கும் வானவியல் பற்றிய உண்மைகள் என்னை வெகுவாகப் பாதித்துள்ளன.

நாங்கள் இப்பொழுது வான மண்டலத்தைப் பற்றிய சிறிய பகுதியைத்தான் எங்கள் ஆராய்ச்சிக்கு எடுத்துக் கொண்டிருக்கின்றோம். இன்றுள்ள இந்த தொலைநோக்கிகளை பயன்படுத்திக்கொண்டு, இந்த முழு வான மண்டலத்தின் மிகச் சிறிய பகுதியைத்தான் கண்காணிக்க முடியும். எனவே நான் இந்த குர்ஆனைப் படித்துக் கொண்டே, இதில் உள்ள கேள்விகளுக்கு விடையளிப்பதன் மூலம் வருங் காலத்தில் இந்த பிரபஞ்சத்தை நான் ஆராய்வதற்கான புதிய வழிகளைத் தேட முடியும் என நினைக்கின்றேன் என்று கூறினார்".

**பேரா. டீஜாடட் டீஜாசென் (Prof. Tejatat Tejasen)**

இவர் தாய்லாந்தில் உள்ள ஜியாங்மாய் நகரில் உள்ள ஜியாங்மாய் பல்கலக்கழகத்தின் உடல் கூறு இயல் துறைப் பேராசிரியராகப் பணியாற்றி வருகின்றார். முன்பு இவர் இதே பல்கலைக் கழகத்தில் மருந்துகள் துறைச் சேர்மனாகவும் பணியாற்றி உள்ளார்.சவூதி அரேபியாவின் தலைநகர் ரியாத்தில் நடைபெற்ற எட்டாவது மருத்துவக் கருத் தரங்கில் கலந்து கொண்டு பேசும் பொழுது, கடந்த மூன்று ஆண்டுகளாக அல்குர்ஆனில் என்னுடைய முழு கவனத்தையும் செலுத்தி வருபவனாக ஆகி விட்டேன்.

நான் அதில் கற்றுக் கொண்டதிலிருந்தும் மேலும் இந்த கருத்தரங்கின் மூலமாகவும் நான் படிப்பினையாகப் பெற்றுக்கொண்டது என்ன வெனில், 1400 ஆண்டுகளுக்கு முன்னால் பதிவு செய்யப்பட்டுள்ள இந்த அல்குர்ஆனில் உள்ள அனைத்தும் உண்மையே. அந்த உண்மைகளை இன்றுள்ள அறிவியலினால் நிரூபிக்கவும் முடிந்துள்ளது. இந்த உண்மைகளை இறைவன் மூலம் பெற்று நமக்கு வழங்கிய எழுதவும் படிக்கவும் தெரியாத முஹம்மது அவர்கள், இறைவனின் தூதராகத்தான் இருந்திருக்க முடியும்.

இந்த உண்மைகளை முஹம்மது அவர்களுக்கு வஹி மூலம் வழங்கியவன். உண்மையிலேயே ஒரு தகுதிவாய்ந்த படைப்பாளனாக (இறைவனாக) இருக்கின்றான். அந்தப் படைப்பாளி இறைவனாகத்தான் இருக்க முடியும்.

எனவே, அந்த இறைவனையும் அவனது தூதர் முஹம்மது அவர்களையும் ஏற்றுக் கொள்ளக்கூடிய நேரமாக இதைக் கருதி, லாயிலாஹ இல்லல்லாஹ் முஹம்மதுர் ரசூலுல்லாஹ் என்ற கலிமாவை முன் மொழிந்து, அல்லாஹ் ஒருவனைத் தவிர வேறு இறைவன் இல்லை, தூதர் முஹம்மது(ஸல்) அவர்களை இறைவனது திருத்தூதராகவும் ஏற்றுக்கொள்கின்றேன்.

இந்த சிறந்த வெற்றிகரமான கருத்தரங்கை ஒழுங்குடன் அமைத்துத் தந்த அனைவருக்கும் எனது பாராட்டுதலைத் தெரிவித்துக் கொள்கின்றேன். இங்கே நான் அறிவியல் நோக்கிலும் மற்றும் ஆன்மீக நோக்கிலும் மட்டும் ஆதாயம் அடையவில்லை.

மாறாக, புகழ்பெற்ற விஞ்ஞானிகளுடன் என்னுடைய தொடர்பை ஏற்படுத்திக் கொள்ளக் கூடிய சந்தர்ப்பத்தையும், இங்கே கலந்து கொண்டவர்களில் பலரை நண்பர்களாக ஆக்கிக் கொண்ட சந்தர்ப்பத்தையும் ஆதாயமாகப் பெற்றுள்ளேன்.

மேலும் நான் இங்கு வந்து கலந்துகொண்டு, லாயிலாஹ இல்லல்லாஹ் முஹம்மதுர்ரசூலுல்லாஹ் என்ற திருகலிமாவை மொழிந்து நான் முஸ்லிமாகி விட்டதன் மூலம், எல்லாவற்றையும் விட ஒரு விலைமதிப்பற்ற ஒரு பொருளைப் பொக்கிஷமாகவும் பெற்றுள்ளேன் என்று பேசி முடித்தார்.

மேலே நாம் அறிவியலாளர்கள் மற்றும் விஞ்ஞானிகளின் கருத்துக்களையும் கண்டோம். இதன் பிறகு நம்மில் இந்த கேள்விகளைக் கேட்டுக் கொண்டால் என்ன?

*1400 ஆண்டுகளுக்கு முன்னால் இறைவனால் அருளப்பட்ட அல்குர்ஆனில் கூறப்பட்டுள்ள பல்வேறு துறைகளைச் சார்ந்த அறிவியல் கருத்துக்கள் யாவும், இன்றைய நவீன அறிவியல் துணை கொண்டு அந்தந்தத் துறை நிபுணர்களால் நிரூபணமும் செய்யப்பட்டுள்ளது என்றால், 1400 ஆண்டுகளுக்கு முன்னால் அறிவியல் என்றால் என்னவென்றே அறியாத காலத்தில் வாழ்ந்த முஹம்மது(ஸல்) அவர்களாலோ அல்லது வேறு எந்த மனிதனாலோ இந்த அல்குர்ஆனை இயற்றி இருக்க முடியுமா? எனவே மேலே கூறப்பட்டுள்ள அறிவியல் ஆதாரங்களை நீங்கள் உண்மையிலேயே விளங்கிக் கொண்டவராக இருப்பின், இந்த அல்குர்ஆனானது மனிதக் கரங்களால் இயற்றப்பட்டதல்ல, இறைவன் என்ற அந்த மாபெரும் படைப்பாளனால் அருளப்பட்டது என்று தான் உங்களால் உரத்துக் கூற இயலும்.*

நன்றி : முஸ்லிம் மலர்!

புரோகித சுயநல, வஸீகர, மாய, உடும்புப் பிடியிலிருந்து விடுபட தேவை ஓர் எழுச்சி! எழுச்சி இல்லையேல் வீழ்ச்சியே!! நரகமே!!